ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2078/29 - 2018 ජූලි මස 03 වැනි අඟහරුවාදා - 2018.07.03

2078/29 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் 1 ஆவது பந்தியின் நியதிகளின்படி கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய மற்றும் 2016/37 மற்றும் 2017.04.26 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் திருத்தப்பட்ட, இல. 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் பகுதி I இலக்கம் 20 இன் கீழ் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கி அந்த அட்டவணையின் பகுதி I 2018.06.12 ஆம் திகதி முதல் செயல்படும் வண்ணம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 20. பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள் | பொலிஸ் மா அதிபர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு / ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>III. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல் |
| | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக ஏற்புடைய அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றம் செய்தல்<br>II. பதவி நீக்கம் தவிர்ந்த ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் |
| | பிரதிப் பொலிஸ் மா அதிபர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக ஏற்புடைய அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றம் செய்தல் |
| | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I) | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I) நிர்வாகப் பிரிவிற்குள் இடமாற்றம் செய்தல் |
| | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் | I. ஏற்புடைய நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்றுத் தண்டனைகளை விதித்தல். |

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட இல. 1941/41 மற்றும் 2015.11.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தெடர்ந்தும் வலுவிலிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/09, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூன் 25.

07-560